மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Oxymoron in Palaik Kali

Dr. Vaasu. Arivazhagan

Associate Professor, Department of Tamil, Muthurangam Government Arts College, Vellore, India

Manuscript ID : **MT1A0004**

Volume : **1**

Issue : **1**

Month : **September**

Year : **2021**

Received: 17.08.2021

Revised: 25.08.2021

Accepted: 30.08.2021

Published: 04.09.2021

Pages : 40-47

ABSTRACT:

In the Palaik kali, the mind and money are both opposed. Valentine's mind weaving by division; Any money for the division. It is shown here that Perungadungo, who sang Palaik kali with these opposite parallels, enriched the art of Palaik kali. According to the Marxist theory that poverty is produced where material is produced, these opposites are seen in Freud's view that Life instinct is produced where Death instinct is produced.1 Freud defines the transformation of the Thalaivi conscious mind from death instinct to life instinct as passive ego, and the Thalaivi leader's transformation of himself into intuition into active ego.2 The notion that castration complex 3 is the main reason why women are often the only ones suffering in internal songs is also being explored here. The friend is seen here comforting the Thalaivi who is in sectarian distress, she comforting the Thalaivan, and the leader comforting herself under the opposite parallels.

KEYWORDS:

Oxymoron, Life instinct, Death instinct, Passive ego, Active ego, Freudist, Marxist, castration complex

REFERENCES :

1. Vassu.Arivazhagan, Psychoanalysis in Tamil Literature, Thamizhaga Institute of Research and Advancement, Chennai, 2014.
2. Aranga. Nalangilli, Feraudin Kalai Ilakkiya Ullappaguppaaivu, Vanidasan Pathippagam ,Puducherry, 1999.

பாலைக்கலியில் எதிர் இணைகள்

முனைவர் வாசு. அறிவழகன்,
இணைப் பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை, முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி, வேலூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

கலித் தொகையின் பாலைக் கலியில் மனம், பணம் இவை இரண்டும் எதிராடுகின்றன. பிரிவால் நைவது காதலர் மனம்; பிரிவுக்கு ஏதுவாவது பணம். இந்த எதிர் இணைகளைக் கொண்டு பாலைப் பாடிய பெருங்கடுங்கோ பாலைக் கலியை இலக்கிய செழுமையாக்கி இருப்பது இங்குக் காட்டப்பட்டுள்ளது. பொருள் உற்பத்தியாகிற இடத்தில் தான் வறுமையும் உற்பத்தியாகிறது எனும் மார்க்சியக் கோட்பாட்டின் படி வாழுள்ளுணர்வு உற்பத்தியாகிற இடத்தில் தான் சாவுள்ளுணர்வும் உற்பத்தியாகிறது எனும் பிராய்டிய நோக்கில்[1] இந்த எதிர் இணைகள் பார்க்கப்பட்டுள்ளன. தலைவியின் நனவடங்கு மனம் சாவுள்ளுணர்வில் இருந்து புறத் தூண்டலால் வாழுள்ளுணர்வுக்கு மாற்றப்படுவதை முடங்கு ஈகோ (Passive ego) என்றும், தலைவி தன்னைத் தானே வாழுள்ளுணர்வுக்கு மாற்றிக்கொள்வதை செயலார்ந்த ஈகோ (Active ego) என்றும் பிராய்டியம் வரையறுத்திருப்பதை[2] இந்தப் பாலைக் கலிப் பாடல்களில் பார்க்கப்பட்டுள்ளது. அகத்திணைப் பாடல்களில் பெரும்பாலும் பெண்கள் மட்டுமே துன்பத்தில் இருப்பதற்குக் காயடிப்புச் சிக்கலே (Castration complex) காரணம் எனும் கருத்தும்[3] இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தோழி, பிரிவுத் துன்பத்தில் இருக்கும் தலைவியை ஆற்றுப்படுத்தியதையும், தலைவனை அவள் ஆற்றுப் படுத்தியதையும், தலைவி தன்னைத் தானே ஆற்றுப் படுத்திக் கொண்டதையும் எதிர் இணைகளின் கீழ் இங்குப் பார்க்கப்பட்டுள்ளது.

கருச்சொற்கள்

எதிர் இணைகள், வாழுள்ளுணர்வு, சாவுள்ளுணர்வு, முடங்கு ஈகோ, செயலார்ந்த ஈகோ, பிராய்டியம், மார்க்சியம், காயடிப்புச் சிக்கல்

முன்னுரை

எதிர் இணைகள் (oxymoran) மொழியாட்சிக்குக் கவின் சேர்ப்பதோடு நுவல் பொருளுக்கும் செறிவூட்டும். ஓர் இலக்கிய உத்தியாகக் கருதப்படும் எதிர் இணை எதிரெதிர் அல்லது முரண்பாடான சொற்களை இணைப்பதன் வாயிலாக படிப்பவரின் கவனத்தைப் பெறுவதற்கான ஒரு வழியாகச் செயல்படுகிறது. இந்தச் சொற்கள் புலவர்

தெரிவிக்க முயற்சிப்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது,[1] இந்த இலக்கிய உத்தி காதல் வயப்பட்ட; கவலுகின்ற தலைவின் மனநிலையினைப் பல்வேறு தளங்களில் காட்டும் கலித்தொகையில் எடுத்தாளப்படும் போக்கும் அதனால் அறியலாகும் வாழ்வியல் நோக்கும் ஆராயப்படுகிறது. இவ்வாய்வின் முதன்மைத் தரவாகப் பாலைக் கலியின் கடவுள் வாழ்த்துத் தவிர்த்த முதல் பத்து செய்யுட்கள் உள்ளன.

செவ்வியல் இலக்கியங்களில் பாலைத் திணைச் செய்யுட்கள் தலைவன் தலைவி பிரிவு; பிரிவிற்கான நிமித்தம் ஆகியனவற்றை அக்கால வாழ்வியலுக்கு உகந்தவாறு வெளிப்படுத்துகின்றன. பிரிவால் நைவது காதலர் மனம்; பிரிவுக்கு ஏதுவாவது பணம். பாலைக் கலியில் மனம் - பணம் இரண்டும் எதிராடுகின்றன. இதனை எதிர் இணையாக்கி பாலைப் பாடிய பெருங்கடுங்கோ பாலைத் திணைப்பாடல்களை இலக்கியச் செழுமை ஊட்டும் திறத்தை இக்கட்டுரை விளக்குகிறது,

தொல் தமிழர்களின் பண்பாட்டு வெளிச்சமாக விளங்கும் பாலைக்கலி பிரிவுத் துன்பத்தைச் சுட்டிக்காட்டினாலும், அது பல்வேறு வாழ்வியல் சிக்கல்களையும் எடுத்து எதிர் இணைகொண்டு காட்டுவதாகவே உள்ளது. அவற்றுள் உளத்தெழும் சிக்கல் மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இப்பாலைக்கலிச் செய்யுட்களில் பொருள் வயிற் பிரிவிற்காகத் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் தடுத்து நிறுத்தப் படுவதாகக் காட்டப்பட்டுள்ளது. உடன்போக்கிற்கு உட்பட்ட தலைவியை எண்ணித் தாய் வருந்துவதாகவும் இச்செய்யுட்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. இச் செய்யுட்களின் நுவல் பொருள்; பணம் x மனம் எனும் எதிர் இணைகளைக் (oxymoron) கொண்டு வாழ்வியலைக் கவினுறக் காட்டுகின்றன. பத்துப் செய்யுட்களில் ஒன்பது செய்யுட்கள் பணத்தைக்காட்டிலும் மனம்தான் பெரிது என்றும், பத்தாவது செய்யுளில் மனம் பெரிதாயினும் பணமும் பெரிது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உளப் போராட்டம்

மார்க்சியப் பொருள்முதல் வாதம் தோன்றிய பின்னர் தான் கருத்து முதல் வாதத்தில் இருந்த மனத்திற்கு உருவம் கொடுக்கப்பட்டது. அவ்வாறு உருவம் கொடுக்கப்பட்ட மனம் நனவிலி, நனவடங்கு, நனவு ஆகிய மூன்று நிலைகளில் பிராய்டினால் பிரித்துப் பார்க்கப்பட்டது.[2] உழைக்கும் வர்க்கத்திற்குப் பணம் பொருளாக இருப்பதைப் போல வளமான வாழ்க்கைக்குக் கட்டுப் படுத்தப்பட்ட மனம் பொருளாக இருக்கிறது என்று பிராய்டு கண்டறிந்தார். மாந்தரின் வளர்ச்சிக்கு மூலதனமாக இருக்கக்கூடிய பணம் அந்த வர்க்கத்தை உழைக்கும் வர்க்கம் உழைப்பைச் சுரண்டும் வர்க்கம் என இரண்டாகப் பிரிக்கிறதென மார்க்சியம் கூறுகிறது, பொருள்

ஆக்கப்படுகின்ற இடத்தில் தான் வறுமையும் உருவாகிறது என்பதை மார்க்சியம் கண்டுணர்ந்தது. இந்த மார்க்சியக் கருத்தின்படி வாழுள்ளணர்வு (live instinct) உருவாகும் நனவிலி மனத்தில்தான் சாவுள்ளுணர்வும் (death instinct) உருவாகிறது என்று பிராய்டு கருத்துரைத்தார்.[3]

முப்பகுப்பில் ஈருணர்வு

மனித சமுதாயம் இயங்கியலை அடிப்படையாகக் கொண்டு மாறுவதைப் போல மனித மனமும் இயங்கியலை அடிப்படையாகக் கொண்டு மாறக் கூடியது எனும் கருத்தை பிராய்டு முன் வைத்தார். மூன்று வகையாகப் பிரிக்கப் பட்ட மனம் இட் (ID), ஈகோ (Ego), சூப்பர் ஈகோ (Super Ego) ஆகிய மூன்று இயக்கங்களைக் கொண்டு செயல்படுவதாகவும் பிராய்டு குறிப்பிட்டார். இவ்வியக்கங்கள் இயல்பு நடத்தை (normal behavior) பிறழ்வு நடத்தை (abnormal behavior) என இரண்டு நிலைகளில் வெளிப்படுவதாகவும் தெரிவித்தார்.[4]

நனவிலி மனத்தில் (unconcious mind) உருவாகுகின்ற விருப்ப உள்ளுணர்வு நனவடங்கு மனத்தினால் (subconcious mind) கட்டுப் படுத்தப்பட்டு நனவு மனத்தினால் (concious mind) பண்பட்ட நிலையில் வெளிப்படுத்தப் படுகின்றன. இந்த ஒழுங்கமைதியில் நனவிலி மனத்தில் உருவாகுகின்ற விருப்பு உள்ளுணர்வு நனவடங்கு மனத்தினால் கட்டுப் படுத்தப்பட்டு வாழுள்ளுணர்வாகவும் (live instinct) சாவுள்ளுணர்வாகவும் (death instinct) வெளிப்படுத்தப் படுகின்றன.[5] நனவடங்கு மனத்தின் இந்தச் செயல்பாடு ஈகோவினால் இயக்கப்படுகின்றது. இந்த இயக்கம் செயலார்ந்த ஈகோ (Active Ego) முடங்கு ஈகோ (Passive Ego)ஆகிய இரண்டு நிலைகளில் வெளிப்படுகின்றன. முடங்கு ஈகோ சாவுள்ளுணர்விலிருந்து வாழுள்ள ணர்விற்கு மாற்றுவதாகும். சாவுள்ளுணர்வு நிலையில் இருக்கும் ஒருவர் தன்னைத் தானே வாழுள்ளுணர்வு நிலைக்கு மாற்றிக் கொள்ளுதல் செயலார்ந்த ஈகோவாகும். முடங்கு ஈகோவில் புறநிலையில் இருந்து உந்தப் படுகின்ற பொருள்கள் உயர்திணை அல்லாத பொருள்களாகக் கூட இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.[6]

அகத்திணைப் செய்யுட்களில் பெரும்பாலும் பெண்கள் மட்டுமே சாவுள்ளுணர்வில் உழல்வதாகக் காட்டப் படுகின்றனர். இதற்கு காயடிப்புச் சிக்கலே (castration complex) ஏதுவாகிறது எனப் பிராய்டு குறிப்பிடுகிறார்.[7] பெண் எனும் பால் பாகுபாட்டை ஆண் குறி இல்லாதவள் என்ற நிலையிலேயே பிராய்டு பார்க்கிறார். தன்னுடைய உறுப்பை இழந்து விட்ட அச்சவுணர்ச்சிகள் நனவிலி மனத்தில் முன்னரே அழுத்தப் பட்டிருப்பதால் தான் பெண் எப்பொழுதுமே சாவுள்ளுணர்வில் இருப்பதாகப் பிராய்டு தெரிவிக்கிறார். எனவேதான் பெண்கள் எப்பொழுதுமே எதிர்நிலைக் கற்பனைகளிலும் எதிர்நிலை செயல்களிலும் இருப்பதாக அவர் குறிப்பிடுகின்றார்.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பாலைக்கலியில் தோழி, தலைவி ஆகிய பெண்பாற் கூற்றுக்களிலும் எதிர்நிலைக் கற்பனைகளையும் எதிர்நிலை செயல்களையும் உணரமுடிகிறது. இந்நில மாந்தர்களின் கூற்றுக்களில் பணம், மனம் ஆகியவற்றை எதிர் இணைகளாகப் பார்க்கக் கூடிய நிலையினையும் காணமுடிகிறது. இந்நில மாந்தர்களின் கூற்றுக்கள் சாவுள்ளுணர்வில் இருப்போரை வாழுள்ளுணர்வுக்கு மாற்றுகிற நிலையினை முடங்கு ஈகோ, செயலார்ந்த ஈகோ ஆகிய இரண்டு மன இயக்கங்களைக் கொண்டு இந்நில மக்களின் கூற்றுக்கள் நோக்கப்படுகின்றன.

முடங்கு ஈகோ (Passive Ego)

நனவிலி மனத்தில் உருவாகின்ற உள்ளுணர்வுகள் இட் எனும் இயக்கத்தினால் வெளிப்படுகிறபோது அவை புறக்காரணிகளால் கட்டுப்படுத்தப் பட்டால் அந்த மன இயக்கச்செயல்பாடு முடங்கு ஈகோ எனப்படுகிறது. இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பத்துப் பாடல்களில் எட்டுச்செய்யுட்கள் முடங்கு ஈகோவின் செயல் இயக்கத்தைத் தெரிவிக்கின்றன. பாலைக்கலியின் முதல் பாடலில் பொருள் வயிற்பிரிவில் இருக்கும் தலைவனிடம் தோழி,

“மலை இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ?

நிலைஇய கற்பினாள், நீ நீப்பின் வாழாதாள்,

முலையகம் பிரியாமை பொருளாயின் அல்லதை

இல்லென இரந்தார்க்கு ஒன்று ஈயாமை இழிவெனக்

கல்லிறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமோ?”[8]

என்று வினவுகிறாள். இல்லற வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருக்கக்கூடிய பணம் எனும் பொருள் ஈட்ட தலைவியைப் பிரிந்து சென்றால் திரும்பி வரும் வரை அவள் உயிருடன் இருக்க மாட்டாள் என்றும் பணம் எனும் பொருளைவிட தலைவியின் மனம் எனும் பொருளே சிறந்தது என்பதைச் சுட்டிக்காட்டி தலைவனின் பிரிவைத் தோழி தடுத்து நிறுத்தியதாக இப்பாடலில் சொல்லப் பட்டுள்ளது. இதன் வழி சாவுள்ளுணர்வில் இருந்த தலைவி புறவுந்துதலால் வாழுள்ளுணர்வுக்கு மாற்றப்பட்டிருப்பதை அறியவியலுகிறது.

ஆறாவது பாடலில் பொருள் வயிற்பிரிவுக்காகத் தலைப்படுகின்றபோது தலைவனிடம் தோழி,

“செல்நவை அரவத்தும் இனையவள் நீநீப்பின்,

தன்னலம் கடை கொளப் படுதலின் மற்று இவள்

இன் உயிர் தருதலும் ஆற்றுமோ?

முன்னிய தேஎத்து முயன்று செய் பொருளே?”[9]

என்று வினவுகிறாள். பிரியும் முன்பே தலைவி துயருறுகிறாள் என்றால் அவளைப் பிரிந்தால் அவள் இன்னுயிர் பிரியாதா? அவ்வாறு பிரிகின்ற அவள் இன்னுயிரை உன்னால் ஈட்டப் படுகின்ற பொருள் மீட்டுத் தருமா? என்று தோழி தலைவனைப் பார்த்து வினைவி, அவனது பிரிவைத் தடுத்து நிறுத்தியதாக இச்செய்யுள் காட்டுகிறது, எனவே இங்கும் தலைவியின் சாவுள்ளுணர்வு புறவுந்துதலால் வாழுள்ளுணர்வாக மாற்றப் பட்டிருப்பதாக அறியப்படுகிறது. இச்செய்யுளிலும் பணத்தைக் காட்டிலும் தலைவியின் மனமே பெரிது என்பது சுட்டடப்பட்டுள்ளது.

இரண்டாவது செய்யுளில், தடுத்தும் பிரிந்து செல்லும் தலைவனைப் பார்த்துத் தோழி,

“வல்லை நீ துறப்பாயேல், வகைவாடும் இவள் என,

ஒல்லாங்கு யாம் இரப்பவும்,உணர்ந்தீயாய் ஆயினை;

செல்லுநீள் ஆற்றிடைச், சேர்ந்து எழுந்த மரம் வாடப்,

புல்லு விட்டு இறைஞ்சிய பூங்கொடி-தகைப்பன;

. . . .

மேனின்று மெய் கூறும் கேளிர் போல், நீ செல்லும்

கானம் தகைப்ப, செலவு.” [10]

என்று எச்சரிக்கிறாள். எங்கள் வேண்டுகோளை மீறி பிரிந்து சென்றால் செல்லும் வழியில் வாடி நிற்கின்ற மரங்களும் கொடிகளுமே உறவுகளைப் போல முன்வந்து உம்மைத் தடுத்து நிறுத்தும் என்று தோழி தலைவனிடம் எடுத்துரைக்கிறாள். இப்பாடலில் உயர்திணையல்லாப் பொருள்களும் முடங்கு ஈகோ மன இயக்கத்தினை செயல்படுத்துவதாக அறியப்படுகிறது.

இத்திணையின் எட்டாவது பாடலில், உடன்போக்கால் மகளைப் பிரிந்த தாய், சான்றோர்களைப் பார்த்து,

“என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்

தம் முள்ளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்;

அன்னார் இருவரைக் காணீரோ? - பெரும!” [11]

என்று வினவுகிறாள். உடன்போக்கில் சென்ற இவளுடைய மகளைப் பார்த்த சான்றோர்கள் தாம் அவர்களைப் பார்த்ததாகவும், இனி அவள் தலைவனுக்குச் சொந்தம் என்பதை

“பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை

மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்

நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!” [12]

என்று உரைக்கின்றனர். இதனால் தலைவியின் தாய் தன்னிலை உணர்ந்து வாழ் உள்ளுணர்வு நிலைக்கு மடை மாற்றம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. இங்குத் தாய் மகள் ஆகிய இருவரின் மனங்களும் எதிர் இணைகளாகச் செயல்படுகின்றன. இவ்வாறு ஆய்வுக்கு உட்படுத்தப் பட்ட பாலைக்கலிச் செய்யுட்களில் தோழியின் கூற்றாகவும் இயற்கை உணர்த்துவது போலவும் சான்றோர் கூற்றாகவும் முடங்கு ஈகோ செயல் பட்டிருப்பதை நோக்கமுடிகிறது.

செயலார்ந்த ஈகோ (Active Ego)

நனவிலி மனத்தில் தோன்றுகின்ற உள்ளுர்ணவுகள் இட் எனும் இயக்கத்தினால் வெளிவருகிற போது அவை நனவடங்கு மனத்தால், தன்னைத் தானே கட்டுப்படுத்தப் பட்டால், அந்த மன இயக்கச் செயல்பாடு செயலார்ந்த ஈகோ எனப்படுகிறது. இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பத்துப் பாடல்களில் இரண்டுப் செய்யுட்கள் செயலார்ந்த ஈகோவின் செயல் இயக்கத்தில் அமைந்துள்ளன. பாலைக்கலியின் ஐந்தாவது பாடலில், தலைவனின் பிரிவைத் தாங்கவியலாத் தலைவி,

“தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்

கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு என்றால்,

என்னீர் அறியாதீர் போல, இவை கூறல்?

நின்னீர அல்ல, நெடுந்தகாய்! எம்மையும்,

அன்பு அறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு

துன்பம் துணையாக நாடின், அதுவல்லது

இன்பம் உண்டோ எமக்கு?"[13]

என்று தன்னைத்தானே ஆற்றுப்படுத்திகொண்டு தலைவனையும் ஆற்றுப்படுத்துகிறாள். பிரியக் கூடாதென்று மீண்டும் மீண்டும் சொல்லியும் பிரிய நினைக்கும் தலைவனிடம் தன்னையும் உடன் அழைத்துச் செல்லுமாறு தலைவி கூறியிருப்பது, தலைவி தன்னைத் தான் ஆற்றுப்படுத்திகொண்ட செயலார்ந்த ஈகோவின் இயக்கத்தைக் காணமுடிகிறது. இங்கும் பணத்தைக் காட்டிலும் மனமே பெரிது எனும் கருத்து வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

பத்தாவது பாடலில் பிரிந்து சென்ற தலைவனுக்காக ஏங்கும் தலைவியிடம் தோழி,

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்,

பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்,

புரிவமர் காதலிற் புணர்ச்சியும் தரும் எனப்,

பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநம் காதலர்

வருவர்கொல்; வயங்கிழாய் அய்!"[14]

என்று விளக்கியுள்ளாள். வாழ்க்கைக்குப் பெரிய பகை வறுமை, அந்த வறுமையை வெல்வதற்குப் பொருள் ஈட்டச் சென்ற தலைவன் கண்டிப்பாகத் திரும்பி வருவான் என்று தலைவியைத் தோழி ஆற்றுப்படுத்தியுள்ளாள். பிரிவு என்பது தாங்கமுடியாததாயினும் வாழ்க்கைக்குப் பொருளும் தேவை என்பதால் தோழி தன்னைதானே ஆற்றுப் படுத்திக்கொண்டு தலைவியையும் ஆற்றுப் படுத்தியிருப்பதை இங்கு நோக்க முடிகிறது. இங்கு மனம் பெரிதாயினும் பணமும் தேவை என்பதாக எதிர் இணைகள் அமைந்துள்ளன.

முடிவுரை

உளப்பகுப்பாய்வில் சாவுள்ளுணர்வில் இருப்போரை வாழுள்ளுணர்வு உணர்ச்சிக்கு மடை மாற்றம் செய்வதற்கு எதிர் இணை இலக்கியக் கலைக் கூறு மிக இன்றியமையாத ஒன்றாக இருப்பதைக் காணமுடிகிறது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பாலைக் கலியின் முதல் பத்துப் பாடல்களில் "பணம் - மனம் ; மனம் -மனம்" ஆகிய இரண்டு நிலைகளில் எதிர் இணைகள் செயல்படுவதைப் பார்க்கமுடிகிறது. நனவிலி மனத்தில் உற்பத்தியாகிற கட்டுப்பாடற்ற உள்ளுணர்வுகள்

இட் எனும் இயக்கத்தினால் வெளிவருகிற போது, அவை நனவடங்கு மனத்தினால் செயலார்ந்த நிலை, முடங்கு நிலை ஆகிய ஈகோ இயக்கத்தினால் காட்டுப்படுத்தப் படுகின்றன. இவ்வாறு கட்டுப்படுத்தப்படுவதை இந்நில மக்களின் கூறுக்கள் வழியே அறியமுடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. https://literaryterms.net/oxymoron/
2. https://www.britannica.com/biography/Sigmund-Freud
3. https://sigfreud.fandom.com/wiki/Life_and_Death_Instincts_Theory
4. https://ta.wikisource.org/s/8usi
5. வாசு. அறிவழகன், தமிழிலக்கியத்தில் உளப்பகுப்பாய்வு, தமிழகக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம், சென்னை-2014.
6. அரங்க. நலங்கிள்ளி, பிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு, வாணிதாசன் பதிப்பகம்,புதுவை-1999
7. பி.இரத்தினசபாபதி, கற்போர் கற்றல் உளவியல், சாந்தா பப்ளிஷர்ஸ்,சென்னை-2016
8. புலியூர்க்கேசிகன்(உரை),கலித்தொகை,பாரிநிலையம், சென்னை,1984, பாலைக்கலி: பாடல்:1, வரி:12-16.
9. மேலது, பாடல்:6, வரி:18-21.
10. மேலது, பாடல்:2, வரி:10-22.
11. மேலது, பாடல்:8, வரி: 6-8.
12. மேலது, பாடல்:8, வரி: 6-8.
13. மேலது, பாடல்:5, வரி: 5-11.
14. மேலது, பாடல்:10, வரி: 1-5.

துணைநூற்பட்டியல்

1. வாசு. அறிவழகன், தமிழிலக்கியத்தில் உளப்பகுப்பாய்வு, தமிழகக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம், சென்னை-2014.
2. அரங்க. நலங்கிள்ளி, பிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு, வாணிதாசன் பதிப்பகம்,புதுவை-1999.